# 19 சமாதானம்

சமாதானம் சமாதானம் சமாதானம்

மனிதர் மனதில் அன்பு முதலில்
மலர வேண்டுமே

மலர்ந்த அன்பு தேவனோடு
உறவு வேண்டுமே.

உறவு கொண்ட நெஞ்சிலே
உவகை பொங்குமே

பொங்கும் உவமை மனதில் என்றும்
அமைதி தங்குமே
(சமாதனம்)

மேலேயுள்ள பாடலைப் பாருங்கள்.
அப்பாடலில் உமது வாழ்க்கைக்கு பின்பற்றக்கூடிய பண்புகளை பட்டியல்படுத்துக.

## சமாதானம் பற்றிய கிறிஸ்தவ படிப்பினை

பழைய உடன்படிக்கையில் 'சமாதானம்' என்பதற்குப் பயன்படுத்தும் எபிரேயச் சொல் 'ஷாலொம்' (Shalam) என்பதாகும். ஷாலொம் என்பது உள்ளார்ந்த சமாதானத்தைக் குறிக்கிறது. உள்ளார்ந்த சமாதானத்துக்கு அடிப்படையாக இருப்பது, உண்மை, நீதி, அன்பு, சுதந்திரம் என்னும் பண்புகளாகும். நாம் பிறருக்கும், அவர்களது உரிமைகளுக்கும் மதிப்பளிப்பதன் வழியாக, உள்ளார்ந்த சமாதானத்தை உருவாக்க முடியும், எவ்வாறெனில் யுத்தம் வன்செயல் அற்றுக் காணப்படும் அமைதி நிலையை விட, பிறருக்கு மதிப்பளிப்பதாலேயே நிலையான அமைதியை ஏற்படுத்த முடியும்.

மனித வாழ்வைப் பாதுகாக்கவும், கட்டியெழுப்பவும் சமாதானம் அவசியமாகின்றது. நீதியைக் கட்டி எழுப்புதல், மற்றவர்களுடைய தேவை மட்டில் விழிப்பாயிருத்தல், மற்றவர்களை மதித்தல், சகோதர அன்போடு செயற்படுதல் ஆகியவை மனித வாழ்வைப் பாதுகாத்து கட்டியெழுப்பும் செயற்பாடுகளாகும்.

சமாதனத்தின் அரசனாகிய இயேசு, உள்ளார்ந்த சமாதானத்தை நிலைநாட்டவே இவ்வுலகிற்தா வந்தார். பாவத்தினால் இழந்த இறை - மனித உறவை இயேசு தம் சிலுவை மரணத்தினால் மீண்டும் நிறுவி சமாதானத்தை ஏற்படுத்தினார். அதுமட்டுமின்றி 'அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்' என்று கூறி சமாதானத்தை உருவாக்க எமக்கு அழைப்பு விடுகிறார். (மத் 5:9) மேலும், ஒப்புரவு அருளடையாளத்தை ஏற்படுத்தி பாவங்களுக்கு மன்னிப்பளித்து, மனித உள்ளங்களில் சமாதானத்தை உருவாக்கும் பணியினை திருச்சபைக்கு அளித்தார்.

மனித வாழ்வைப் பாதுகாக்கவும், கட்டி எழுப்பவும் சமாதானம் அவசியம். அதனை கொடையாக கிறிஸ்து தருகின்றார். பொறாமை, வைராக்கியம், பழிவாங்குதல் என்னும் எதிர்நிலைப்பண்புகள் கிறிஸ்தவ அன்பிற்கு மாறுபட்டதாகும். இத்தகைய உணர்வுகள் தொடர்ந்து உள்ளத்தில் வளர இடமளித்தால், இன்னுமொருவருக்கு தீங்கை விளைவிக்கவும், ஒருவரை பிழையான வழி நடத்தலுக்கு தூண்டுவதாகவும் அமையும், காயினும் இந்நிலைக்கே ஆளாகினார். எனவே தீய உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்வது அவசியமானதாகும் என இயேசு கற்றுத் தந்தார்.

தம் சகோதரர், சகோதர்களிடம் சினங்கொள்கிறவர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவார். தம் சகோதரனையோ சகோதரியையோ முட்டாளே என்பவர் தலைமைச் சங்கத் தீர்ப்புக்கு ஆளாவார். அறிவிலியே என்பவர் எரிநரகத்துக்கு ஆளாவார்.

(மத் 5:22)

பகைவரை அன்பு செய்து, துன்பறுத்துவோருக்காகச் செபிக்க வேண்டும் என்பதுஇயேசு வின் போதனைகளின் மையக் கருத்தாகும்.

உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள். உங்களைத் துன்புறுத்து வோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். இப்படிச் செய்வதால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள். ஏனெனில் அவர் நல்லோர் மேலும், தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார். நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றோர் மேலும் மழை பெய்யச் செய்கிறார்.

(மத் 5:44,45)

※ **சமாதானத்தைக் கட்டியெழுப்ப,**

- நீதி தேவை (Justice)
- அன்பு தேவை
- பெலவீனமானவர்களைப் பாதுகாக்க வேண்டும்
- வன்செயல்களைக் களைதல் வேண்டும்
- மனித உயிர்களைக் கொலை செய்யக் கூடாது
- மனித உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும்

## போரை வெறுத்தல்

- போரும், போர்கருவிகளைச் சேகரித்தலும் பயங்கரமானது
- போருக்காகச் செலவிடும் பணத்தைக்கொண்டு, உலகத்தில் வறுமையை நீக்கலாம்
- போரை வெறுத்தலும், உள்ளார்ந்த அமைதியைக் கட்டியெழுப்புவதும் கிறிஸ்துவ கடமையாகும்
- போர்க்கருவிகளை உற்பத்தி செய்வதற்கு, எதிராகவும் போரை ஒழிக்கவும் பல்வேறு நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டும்.

## அசிசி நகர் தூய பிரானிசிஸியாரின் செபம்



19.1 படம் அச்சி நகர் தூய பிரான்சிஸ்

ஆண்டவரே!

என்னை உமது சமாதானத்தின் கருவியாக்கும். வெறுப்புள்ள இடத்தில் அன்பையும், மனவருத்தம் உள்ள இடத்திவ் மன்னிப்பையும், ஐயமுள்ள இடத்தில் நம்பிக்கையையும், இருள் உள்ள இடத்தில் ஒளியையும், துன்பம் உள்ள இடத்தில் மகிழ்ச்சியையும் நான் விதைத்திட அருள்புரியும்.

ஓ தெய்வீகக் குருவே!

ஆறுதல் தேடுவதைவிட ஆறுதல் அளிக்கவும், பிறரால் புரிந்துகொள்ளப்படுவதைவிட பிறரைப் புரிந்துகொள்ளவும், அன்புசெய்யப்படுவதைவிட அன்புசெய்யவும், எனக்கு அருள்புரியும்.

ஏனெனில், தருவதில்தான் நாங்கள் பெறுகிறோம். மன்னிப்பதில்தான் மன்னிக்கப் படுகிறோம், மரிப்பதில்தான் முடிவில்லா வாழ்வுக்குப் பிறக்கிறோம், ஆமேன்.

## நாமும் அமைதியின் கருவிகளாக மாறவேண்டும்

சமாதானத்தின் அரசனாகிய கிறிஸ்துவுக்குள் வாழ்வதன் மூலம் அனுபவிக்கும் அமைதி ஒருவர் ஒருவரோடு பகிர்ந்துகொள்ள வழிசெய்ய வேண்டும். துன்பங்கள், தடைகள் நிறைந்த சூழலில் இயேசுவின் பிரசன்னத்தில் விசுவாசம் வைத்து உள்ளார்ந்த அமைதியை அனுபவிக்க எப்போதும் பழகிக்கொள்ள வேண்டும்.




**செயற்பாடு**

1. பாடசாலைச் சமூகத்தினுள் சமாதானத்தைப் பேணக் கூடிய வழிகள் ஐந்தினை உதாரணங்களுடன் முன் வைக்குக.
2. இலங்கை மக்களுக்கிடையே சமாதானத்தைக் கட்டியெழுப்பத் திருச்சபைக்குள்ள கடமைகள் ஐந்தினை எழுதுக.
3. ‘அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்’ எனும் தலைப்பின் கீழ் 100 சொற்களில் கட்டுரை வரைக.
4. அசீசியின் புனித பிரான்சிஸ் முன்வைத்த செபத்தின் மூலம் உமது வாழ்க்கைக்கு கற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதிரிகைகள் ஐந்தினை நிரல்படுத்துக.